**மே – 24**

# TNPSC துளிகள்

- கோல் இந்தியா நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக அனில் குமார் ஜா நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது மகாநதி நிலக்கரி நிறுவனத்தின் CMD ஆக ஜா உள்ளார். 2020 ஜனவரி 30 வரை இவர் இப்பதவியில் இருப்பார்.
- கோபன்ஹெகனில் உள்ள ராயல் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற பனிஹாக்கி உலககோப்பைப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் பெனால்டி சூட் அவுட்டில் சுவிட்சர்லாந்தை வீழ்த்தி, சுவீடன் பனிஹாக்கி "சாம்பியன்ஷிப் பட்டத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது". ஓராண்டிற்கு முன்பு சுவீடன் கனடாவை வீழ்த்தி இச்சாம்பியன் பட்டத்தை வென்றது.
- இங்கிலாந்து நாட்டின் தேசிய குற்ற நிறுவனமானது தன்னுடைய அறிக்கையில் இங்கிலாந்து நாட்டில் பண மோசடிக்கான மூன்று முன்னணி மூல ஆதாரங்களின் பட்டியலில் பாகிஸ்தான் நாட்டை பட்டியலிட்டுள்ளது. பிற இரு நாடுகளாவன நைஜீரியா மற்றும் இரஷ்யா.

# தேசியச் செய்திகள்

## யுக்திசார் பெட்ரோலியம் இருப்புகள்

- கர்நாடகாவில், மேற்கு கடற்கரையில் உள்ள மங்களூருவில் அமைந்துள்ள தன்னுடைய முக்கியத்துவம் வாய்ந்த பெட்ரோலியம் இருப்பு (Strategic petroleum reserve - SPR) கிடங்கிற்கு ஐக்கிய அரபு அமீரகத்திலிருந்து 2 மில்லியன் கச்சா எண்ணெய் பேரல்களின் முதல் சரக்கினை இந்தியா பெற்றுள்ளது. SPR திட்டத்தின் முதல் கட்டத்தின் கீழ் மத்திய அரசானது மூன்று இடங்களில் மொத்தம் 5.33 மில்லியன் டன் கொள்ளளவு கொண்ட மூன்று நிலத்தடி கச்சா எண்ணெய் சேகரிப்பு கிடங்குகள் கட்டப்படும் என அறிவித்திருந்தது.
- அம்மூன்று கிடங்குகளாவன :
    - விசாகப்பட்டினம் (ஆந்திரப் பிரதேசம்)
    - மங்களூரு (கர்நாடகா)
    - படுர் (கேரளா)
- 2017-18-ஆம் ஆண்டிற்கான பொது பட்ஜெட்டில் மத்திய அரசானது SPR திட்டத்தின் இரண்டாவது கட்டத்தின் ஒரு பகுதியாக மேலும் இரு SPR-க்கள் இரு இடங்களில் கட்டப்படும் எனத் தெரிவித்திருந்தது.
    - சண்டிகோல் (ஒடிஸா)
    - பிகானேர் (ராஜஸ்தான்)
- வெளிப்புற கச்சா எண்ணெய் விநியோக ஒருமைப்பாடுகளுக்கான ஓர் பதிலெதிர்ப்பாக நாட்டின் 10 நாட்களுக்குத் தேவையான நுகர்விற்கு எரிபொருள் பாதுகாப்பை இவை வழங்கும்.
- இந்த எரிபொருள் இருப்புகளானது இந்திய பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த

பெட்ரோலியம் இருப்புகள் நிறுவனம் எனும் சிறப்பு பணி அமைப்பினால் பராமரிக்கப்படும். இது மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் எண்ணெய் தொழிற்சாலை மேம்பாட்டு ஆணையத்திற்கு முழுவதும் சொந்தமான துணை நிறுவனமாகும்.

## காந்திவ் விஜய்

- ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள மஹாஜன் சுடுதல் பகுதியில் இந்திய இராணுவத்தின் மேற்கத்தியப் பிரிவின் சிறுத்தைப் படையினர் “காந்திவ் விஜய்” எனும் இராணுவப் பயிற்சியினை நடத்தியுள்ளனர்.
- இராணுவத்தின் சிறுத்தைப் படையினரின் செயல்பாட்டுத் திட்டங்களை மதிப்பிடுவதற்காக இந்த இரு மாத இராணுவப் பயிற்சி நடத்தப்பட்டுள்ளது.
- நவீன உளவு, கண்காணிப்பு, வேவுப் பணி உபகரணங்களினைப் பயன்பாட்டிற்கு உட்படுத்தி, நவீன சாதனங்களின் பிணையங்களை மையப்படுத்திய சூழலில் கூட்டு வான்வழி மற்றும் தரைவழிப் போர் முறைகள் மூலம் தாக்குதல் செயல்பாடுகளை மேற்கொள்வதை மையமாகக் கொள்வதை இந்தப் பயிற்சி அடிப்படையாகக் கொண்டது.



## பிளாக் பந்தர்

- ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலுங்கானா மாநிலத்தின் நக்சல் எதிர்ப்பு தாக்குதல் பிரிவான வேட்டை விலங்கு நாய் படையைப் போன்று சத்திஸ்கர் மாநிலமும் பிளாக் பந்தர் எனும் சிறப்பு நக்சல் எதிர்ப்பு தாக்குதல் படையைப் பெற உள்ளது.
- வேட்டை நாய் படையானது நக்சல்கள் மற்றும் மாவோயிஸ்டுகளுக்கு எதிராக கிளர்ச்சித் தடுப்பு ஆயுதச் செயல்பாடுகளின் சிறப்பு நிபுணத்துவமுடைய உயரிய கமாண்டோ படையாகும். இப்படையானது தெலுங்கானா மற்றும் ஆந்திர மாநிலங்களில் நக்சல் கண்காணிப்பு செயல்பாட்டு வரம்புகளோடு வனம்சார் போர்திறத்தில் நிபுணத்துவம் கொண்ட படையாகும்.
- முந்தைய பிரிக்கப்படாத ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் இடதுசாரி தீவிரவாதத்தை

எதிர்ப்பதற்காக ஐ.ஏ.எஸ் அதிகாரியான K.S. அயாஸ் என்பவரால் இப்படை 1989 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## குயிகியாவோ விண்கலம்

- நிலவினுடைய கருமைப் பகுதியினை ஆய்வு செய்யும் சீனாவின் திட்டமிடப்பட்ட சங்கே-4 நிலவு வான்சுற்று ஆய்வுக் கலத்திற்கும், பூமிக்கும் தொடர் இணைப்பினை ஏற்படுத்துவதற்காக குயிகியாவோ (Magpie Bridge) எனப் பெயரிடப்பட்ட தொடர் வரிசை செயற்கைக்கோளை சீனா ஏவியுள்ளது.





- சீனாவின் நிலவு ஆராய்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக லாங் மார்ச் 4C எனும் இராக்கெட்டின் மூலம் ஜீசங் விண்வெளி இராக்கெட் ஏவுதள மையத்திலிருந்து இந்த செயற்கைக் கோள் ஏவப்பட்டுள்ளது.
- நிலவின் சேய்மைப் பக்கத்தினை தாண்டி 64,000 கிலோமீட்டர் தூரத்தில் புவியீர்ப்பு விசை ரீதியாக நிலையான இடமான புவிக்கும் நிலவுக்கும் இடையேயான லெக்ராஞ்சியன் இரண்டாவது புள்ளியில் இந்த செயற்கைக்கோள் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. அதாவது இது ஒளி வட்டச் சுற்றுப்பாதை ஆகும்.
- இதுவே இந்த நிலையத்தில் செயல்படுகின்ற உலகின் முதல் தொலைத்தொடர்பு செயற்கைக்கோளாகும்.
- சீனாவின் நிலவுப் பெண் கடவுளான சங்கேவின் பெயர் கொண்டு சீன நிலவுத் திட்டத்திற்கு சங்கே திட்டம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இது ஓர் செயல் நடப்பில் உள்ள ரோபோட்டிக் நிலவுத் திட்டமாகும்.
- சீனாவின் தேசிய ஆராய்ச்சி நிறுவனம் இந்த திட்டத்தை செயல்படுத்துகின்றது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## நிபா வைரஸ் பாதிப்பு

- மிகவும் மற்றும் கொடிய உயிர் கொல்லி நிபா வைரஸ் தொற்று பாதிப்பு கேரளா மாநிலத்தில் முதன் முறையாகக் கண்டறியப்பட்டுள்ளது.
- நிபா வைரஸ் பாதிப்பானது விலங்குகளிடமிருந்து மனிதனுக்கு பரவக் கூடிய நோயாகும். இவை மனிதர்கள் மற்றும் விலங்குகளில் மோசமான நோய்களை உண்டாக்க வல்லவை.
- டீரோபஸ் இனத்தின் டீரோபோடைடியே குடும்பத்தைச் சேர்ந்த பழந்தின்னி வெளவால் இந்த வைரஸ்களின் இயற்கை உறைவிடத் தாங்கிகளாகும்.




- இந்த வைரஸின் தாக்குதலானது முதலில் 1998 ஆம் ஆண்டு மலேசியாவில் உள்ள கம்பங் சுன்கய் நிமா எனுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.
- இந்த வைரசானது காற்றின் வழியே பரவாது. ஆனால் இந்த வைரஸினால் பாதிக்கப்பட்ட வெளவால்கள் மற்றும் பன்றிகளுடனான நேரடித் தொடர்பின் மூலம் இந்த வைரஸ் பரவ வல்லது.
- நிபா வைரஸினால் பாதிக்கப்பட்டவர்களினால் மனிதர்களிடையேயும் இந்த வைரஸ் பரவும்.
- கடுமையான சுவாசக் கோளாறுகள், மூச்சுத் திணறல், மூளை வீக்கம், காய்ச்சல்,

தலைவலி, சோர்வு, வலிப்பு (delirium) ஆகியவற்றை இது ஏற்படுத்தும். பாதிக்கப்பட்ட நோயாளி 48 மணி நேரத்தில் கோமா நிலையையும் அடைய வாய்ப்புள்ளது.

# விளையாட்டுச் செய்திகள்

## இத்தாலி ஓபன் பட்டம்

❖ இத்தாலி நாட்டில் நடைபெற்ற எட்டாவது இத்தாலி ஓபன் சாம்பியன்ஷிப் போட்டியின் இறுதிகட்டத்தில் நடப்பு சாம்பியனான அலெக்ஸாண்டர் ஜீவெரவ்வினை வீழ்த்தி ரபேல் நடால் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.



❖ இந்த பட்டத்தை வென்றதன் மூலம் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த ரபேல் நடால் களிமண் தரையில் தன்னுடைய 56-வது பட்டத்தை வென்றுள்ளார். அவற்றில் 8 பட்டங்களை ரோம் நகரில் வென்றுள்ளார். திருத்தப்பட்ட ATP உலகத் தரவரிசைப் பட்டியல் வெளியிடப்படுகையில், இந்த வெற்றியின் மூலம் சர்வதேச ATP தரவரிசைப் பட்டியலில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரரை பின்னுக்குத் தள்ளி ரபேல் நடால் மீண்டும் முதலிடத்தைப் பிடித்தார்.

# முக்கிய தினங்கள்


## சர்வதேச உயிரி பல்வகைத் தன்மை தினம் – மே 22

❖ உலகினுடைய உயிரிப் பல்வகைத் தன்மை தொடர்பான பிரச்சனைகளைப் பற்றி உலக மக்களிடையே விழிப்புணர்வையும், புரிதலையும் ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் மே 22-ஆம் தேதி உலகம் முழுவதும் உயிரிப் பல்வகைத்தன்மை தினம் கொண்டாடப்படுகின்றது.

❖ 2018-ஆம் ஆண்டிற்கான உயிரிப் பல்வகைத்தன்மை தினத்தின் கருத்துரு "உயிரி பல்வகைத் தன்மைக்கான செயல்பாடுகளின் 25-வது வருடத்தை கொண்டாடுதல்".

❖ இவ்வாண்டு இத்தினமானது 1992-ஆம் ஆண்டு, மே மாதம் 22-ஆம் தேதி, நைரோபியில் உள்ள ஐ.நா. சுற்றுச்சூழல் திட்டத்தின் தலைமையகத்தில் உயிரியல் பல்வகைத் தன்மைக்கான உடன்படிக்கை அமல்பாட்டிற்கு வந்து 25 வருடங்கள் நிறைவுற்றிருப்பதை குறிக்கவும் இந்த உடன்படிக்கையினுடைய குறிக்கோளை

அடைவதில் தேசியம் மற்றும் உலக அளவில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றத்தினை முன்னிலைப்படுத்தி காட்டவும் கொண்டாடப்படுகின்றது.




- இத்தினத்தன்று கங்கை தூய்மைக்கான தேசிய திட்ட அமைப்பு மற்றும் உலக வனவிலங்கு நிதிக் கூட்டமைப்பு - இந்தியா அமைப்பு ஆகியவை கூட்டிணைந்து "கங்கா மற்றும் அதன் உயிரி பல்வகைத்தன்மை வாழிட மற்றும் உயிரின பாதுகாப்பிற்கு வரைபடத்தினை தயாரித்தல்" எனும் தலைப்பில் ஓர் பயிற்சிப் பட்டறையை புதுதில்லியில் நடத்தியுள்ளன.

- - - - - - - - - - - - - - -